36. பூஞ்சைகளைப் பற்றி படிக்கும் அறிவியல் பிரிவு ______.

1. பைக்காலஜி 2. சைக்காலஜி 3. ஆல்காலஜி 4. மைக்காலஜி

37. பூஞ்சைகளின் உடலம் எதனால் ஆனது?

1. ஹைபா 2. மைசீலியம் 3. கைட்டின் 4. தாலஸ்

38. ஸீனோசைட்டிக் மைசீலியம் காணப்படுவது ______.

1. குறுக்குச் சுவருடைய ஹைபா 2. குறுக்குச் சுவரற்ற ஹைபா

3. இரண்டும் 4. இவற்றில் எதுமில்லை

39. பூஞ்சையின் செல் சுவர் ______ என்ற வேதிப் பொருளால் ஆனது.

1. செல்லுலோஸ் 2. பெப்டிடோ கிளைக்கான்

3. கைட்டின் 4. சூபரின்

40. "பச்சையம் அல்லாத தாவரம்" எது?

1. பூஞ்சை 2. ஆலகா 3. கேரா 4. நாஸ்டாக்

41. கூற்று (A): பூஞ்சையில் ஸ்டார்ச் இருப்பதில்லை.

காரணம் (R): பூஞ்சைகளில் பச்சையம் கிடையாது. இவை பிற சார்பு ஊட்ட முறையைச் சார்ந்தது.

1. A சரி ஆனால் R தவறானது 2. A தவறு ஆனால் R சரியானது

3. A மற்றும் R இரண்டும் சரியானவை 4. A மற்றும் R இரண்டும் தவறானவை

42. இறந்த மற்றும் அழுகிய பொருள்களிலிருந்து உணவைப் பெறுபவை யாவை?

1. கூட்டுயிரிகள் 2. ஒட்டுண்ணிகள் 3. சிம்பயாடிக் 4. மட்குண்ணிகள்

43. "மைக்கோரைசா" என்பது ______.

1. உயர் தாவர வேர் - ஆல்கா 2. பூஞ்சை - உயர் தாவர வேர்

3. ஆல்கா - பவள வேர் 4. ஆல்கா - பூஞ்சை

44. உண்ணத் தகுந்த காளான் எது?

1. அகாரிகஸ் 2. பாலிபோரஸ் 3. பெனிசிலியம் 4. அஸ்பர்ஜில்லஸ்

45. "பெனிசிலின்" என்ற உயிர் எதிர் பொருள் எவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது?

1. பெனிசிலியம் கிரைசோசினம் 2. ஆஸ்பியாகோஸ்பீ

3. பெனிசிலியம் நொட்டேட்டம் 4. சக்காரோமைசிஸ் செர்வியே

LIVEWORKSHEETS

46. "ரிபோபிளவின்" என்ற உயிர்ச்சத்தை உற்பத்தி செய்யும் பூஞ்சை _______.

1. அகாரிகஸ்
2. கிளாடோஸ்பேரியம்
3. அஸ்பர்ஜில்லஸ்
4. எரிமோதீசியம் ஆஸ்பியீ

47. ஈஸ்ட்டானது, நொதித்தலின் மூலம் ஆல்கஹாலை உற்பத்தி செய்ய உதவும் நொதி _______.

1. டயலின்
2. இன்வர்டேஸ்
3. ஜியாமேஸ்
4. அமைலின்

48. பொருத்துக.

i. சிவப்பு அழுகல் நோய் - a) பைரிகுலேரியா ஒரைசா

ii. பிளாஸ்ட் நோய் - b) செர்க்கோஸ்போரா பெர்சொனேட்டா

iii. வாடல் நோய் - c) கோலிடோட்ரைக்கம் ஃபல்கேட்டம்

iv. டிக்கா நோய் - d) ஃபியூசேரியம் ஆக்சிஸ்போரம்

1. i - c ii - d iii - b iv - a
2. i - c ii - b iii - d iv - a
3. i - c ii - a iii - d iv - b
4. i - c ii - d iii - a iv - b

49. "அல்புகோ கேண்டிலா" என்ற பூஞ்சை எந்த தாவரத்தைத் தாக்குகிறது?

1. முள்ளங்கி
2. கரும்பு
3. நெல்
4. பருத்தி

50. பகற்கனவைத் தூண்டும் பூஞ்சை _______.

1. பெனிசிலியம் நொட்டேட்டம்
2. குளோரெல்லா ஃபைரினாய்டோசா
3. கோலிடாட்ரைக்கம் ஃபல்கேட்டம்
4. கிளாவிசெப்ஸ் பர்பூரியா

51. குழந்தைகளுக்கு "ஒவ்வாமையை" ஏற்படுத்தும் பூஞ்சை _______.

1. கிளாவிசெப்ஸ்
2. அஸ்பர்ஜில்லஸ்
3. கிளாடோஸ்போரியம்
4. ரைசோபஸ்

52. பூஞ்சைகளின் சேமிப்பு பொருள் _______.

1. ஸ்டார்ச்
2. புரதம்
3. கொழுப்பு
4. கிளைக்கோஜன் மற்றும் எண்ணெய்

53. "இரு வாழ்வி தாவரங்கள்" என அழைக்கப்படுவது _______.

1. டெரிடோஃபைட்டா
2. பிரையோஃபைட்டா
3. ஜிம்னோஸ்பெர்ம்
4. ஆஞ்சியோஸ்பெர்ம்

54. "ஈரல் வடிவம்" கொண்ட பிரயோஃபைட் எது?

1. ஃபியூனேரியா
2. ஆந்தோசெரஸ்
3. ரிக்சியா
4. ஸ்பேக்னம்

55. "பீட் மாஸ்" என அழைக்கப்படுவது _______.

LIVEWORKSHEETS

1. ஃபியூனேரியா 2. ரிக்சியா 3. மார்கான்சியா 4. ஸ்பேக்னம்

56. குப்பைமேனியின் அறிவியல் பெயர்_______

(1) *சொலானம் டியூபரோஸம்* (2) *அகாலிஃபா இண்டிகா*

(3) *அலொ வெரா* (4) *பில்லாந்தஸ் அமாரஸ்*

57. கல்லீரல் நோய்க்கு சிறந்த மருந்து _______.

(1) சோற்றுக் கற்றாழை (2) கீழாநெல்லி

(3) குப்பைமேனி (4) வில்வம்

58. வில்வம் எந்த குடும்பத்தைச் சேர்ந்தது?

(1) ரூட்டேசி (2) சொலனேசி (3) யூஃபோர்பியேசி (4) லில்லியேசி

59. வயிற்றில் உள்ள உருளைப் புழுக்களை அழிக்கப் பயன்படும் தாவரம் _______.

(1) வில்வம் (2) குப்பைமேனி (3) கற்றாழை (4) கீழாநெல்லி

60. காசநோய் மற்றும் ஆஸ்துமாவுக்கு மிகச் சிறந்த மருந்து _______.

(1) குப்பைமேனி (2) கீழாநெல்லி (3) தூதுவளை (4) வில்வம்

61. நீர் வாழ் பெரணி என அழைக்கப்படுவது எது?

(1) மார்சீலியா (2) ரைசோபியம் (3) செலாஜினெல்லா (4) பைனஸ்

62. நொதித்தலின் போது வெளியிடப்படும் வாயு?

(1) ஆக்ஸிஜன் (2) கார்பன் டை ஆக்சைடு

(3) அமோனியா (4) மீத்தேன்

63. மருந்துகளின் ராணி என அழைக்கப்படுவது?

(1) பென்சிலின் (2) பெனிசிலியம் (3) ஸ்ட்ரெப்டோமைசின் (4) கிரைசோல்கின்

64. காற்றில்லாச் சுவாசித்தலில் ஈடுபடுவது எது?

(1) பாக்டீரியா (2) ஈஸ்ட்

(3) இவைகளில் எதுவுமில்லை (4) பாக்டீரியா மற்றும் ஈஸ்ட்

65. ஈஸ்டின் காற்றில்லாச் சுவாசத்தினால் உண்டாவது?

(1) லாக்டிக் அமிலம் (2) பைருவிக் அமிலம் (3) எத்தனால் (4) அசிட்டிக் அமிலம்

66. கூட்டுயிரி வாழ்க்கை முறைக்கு எடுத்துக்காட்டு?

(1) லைக்கன் (2) பூஞ்சை (3) ஆல்கா (4) பாக்டீரியா

67. அயோடின் எந்த வகை ஆல்காவிலிருந்து பெறப்படுகிறது?

LIVEWORKSHEETS

(1) பழுப்பு (2) சிவப்பு (3) நீலப்பச்சை (4) இவை அனைத்தும்

68. விண்வெளிப் பயணத்தின் போது பயன்படுத்தப்படும் பாசிகள்?

(1) ஜெலிடியம் (2) கிராஸ்லேரியம் (3) லாமினேரியா (4) குளோரெல்லா

69. குழந்தைகளுக்கு ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் கால் சட்டையாகப் பயன்படுத்தப்பட்ட தாவரம்?

(1) ஸ்பாக்னம் மாஸ் (2) பீட் மாஸ் (3) ரிக்ஸியா (4) ப்யூனேரியா

70. உயிரியல் துப்புரவாளர்கள் எனப்படுவது?

(1) பூஞ்சை (2) பாக்டீரியா (3) (1), (2) இரண்டும் (4) எதுவும் இல்லை

LIVEWORKSHEETS